RNI-N0: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023 - 2025




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்





சிவகங்கை | மலர்-4 | இதழ்-87 | 04 ஏப்ரல் | வெள்ளிக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

## ‘அடிபணியும் கலாச்சாரம்‘ சீன எல்லை பிரச்சினை, அமெரிக்க வரி விவகாரத்தில் மத்திய அரசை சாடிய ராகுல்

புதுடெல்லி, ஏப்.4

சீனாவுடனான எல்லைப் பிரச்சினை, அமெரிக்காவின் கூடுதல் வரி தொடர்பாக மத்திய அரசை கடுமையாக சாடிய மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி, சீனா 4,000 சதுர கி.மீ. இந்திய எல்லையை ஆக்கிரமித்துள்ளதாகவும், அமெரிக்க வரி இந்திய பொருளாதாரத்தை முழுவதும் சீரழித்துவிடும் என்றும் தெரிவித்தார்.



மக்களவையில் பூஜ்ய நேரத்தில் பேசிய எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி கூறியதாவது: நமது நாட்டு எல்லையில் 4000 சதுர கிலோ மீட்டரை சீனா ஆக்கிரமித்துள்ளது. சில நாட்களுக்கு முன்பு நமது வெளியுறவு செயலாளர் (விக்ரம் மிஸ்ரி) சீனத் தூதருடன் கேக் வெட்டுவதைப் பார்த்து நான் அதிர்ச்சி அடைந்தேன். இப்போது கேள்வி என்ன வென்றால், உண்மையில் சீனா ஆக்கிரமித்துள்ள அந்த 4,000 சதுர கி.மீ. பகுதியில் என்னதான் நடக்கிறது?

கடந்த 2020ம் ஆண்டு கல்வானில் 20 ராணுவ வீரர்கள் வீரமரணம் அடைந்தனர். நாங்கள் இயல்புநிலைக்கு எதிரானவர்கள் இல்லை. ஆனால் அங்கு முன்பிருந்த நிலை தற்போதும் இருக்க வேண்டும். நமது நிலத்தை நாம் திரும்பப் பெற வேண்டும். நமது குடியரசுத் தலைவரும், பிரதமரும் சீனாவுக்கு கடிதம் எழுதி உள்ளதாக நான் அறிகிறேன்.

இதையும் நமது மக்கள் யாரும் சொல்லவில்லை. பிரதமரும், குடியரசுத் தலைவரும் தங்களுக்கு கடிதம் எழுதி இருப்பதாக சீன தூதர் இந்திய மக்களுக்கு தெரிவித்துள்ளார். வெளியுறவுக் கொள்கை என்பது வெளிநாடுகளுடனான உறவை நிர்வகிப்பதைக் குறிக்கும். நீங்கள் சீனாவுக்கு நமது நிலத்தில் 4000 சதுர கி.மீ. விட்டுக்கொடுத்துள்ளீர்கள்.

நமது நட்புநாடான அமெரிக்கா திடீரென நம் மீது வரிகளை விதிக்கிறது. அமெரிக்காவின் இந்த வரிவிதிப்பு இந்திய பொருளாதாரத்தை, குறிப்பாக வாகன உற்பத்தி, மருந்து தயாரிப்பு, விவசாயத்துறைகளை சீர்குலைக்கப் போகிறது.

இந்திரா காந்தியிடம் ஒருமுறை ஒருவர் ‘வெளியுறவு கொள்கை விஷயத்தில் நீங்கள் வலது அல்லது இடது பக்கங்களில் எங்கு சாய்வீர்கள்’ எனக் கேட்டார். அதற்கு இந்திரா காந்தி, ‘ நான் வலது, இடது எந்தப்பக்கமும் சாயமாட்டேன், நேராக நிற்பேன், நான் இந்தியர்; நேராக நிற்பேன்’ என்றார்.

ஆனால் பாஜக மற்றும் ஆர்எஸ்எஸ் வேறு வகையான கொள்கையை வைத்துள்ளது. அவர்களிடம் வலதா, இடதா எனக் கேட்டால், எங்கள் முன்பு இருக்கும் வெளிநாட்டினர் முன்பு நாங்கள் தலைவணங்கி நிற்போம் என்று கூறுவார்கள். இது அவர்களின் கலாச்சாரத்தில், வரலாறில் உள்ளது. நமக்கும் அது தெரியும்.

நமது எல்லையில், நம் மீது விதிக்கப்பட்டுள்ள வரிகளில் இந்தியா என்ன செய்யப்போகிறது என்பது குறித்து மத்திய அரசு விளக்க வேண்டும். இவ்வாறு ராகுல் பேசினார்.

## மத்திய அரசை கண்டித்து தலைமைச் செயலக வளாகத்தில் திமுக எம்எல்ஏக்கள் கோஷம்

சென்னை, ஏப்.4




மத்திய அரசை கண்டித்து தலைமைச் செயலக வளாகத் தில் திமுக எம்எல்ஏக்கள் பதாகைகள் ஏந்தி கோஷமிட்ட னர்.

வக்பு வாரிய சட்ட திருத்த மசோதா நாடாளுமன்றத்தில் மக்களவையில் தாக்கல் செய்யப்பட்டதை கண்டித்து தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் உள்ளிட்ட அமைச்சர்கள், திமுக சட்டப்பேரவை உறுப்பினர்கள், காங்கிரஸ், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சட்டப்பேரவை உறுப்பினர்கள் இன்று சட்டபேரவை நிகழ்வுகளில் கருப்பு பேட்ஜ் அணிந்து கலந்து கொண்டனர்.

இந்நிலையில் திமுக எம்எல்ஏக்கள் சட்டப்பேரவை வளாகத்தில் வக்பு வாரிய சட்டத்திருத்த மசோதாவுக்கு எதிர்ப்பு தெரிவித்து பதாகைகளை ஏந்தியவாறு ‘இஸ்லாமியர்களை நிராகரிக்காதே’ ‘இஸ்லாமியர்களை அழிக்காதே’ போன்ற கோஷங்களை எழுப்பினர்.

அப்போது திமுக எம்எல்ஏ இ.பரந்தாமன் செய்தியாளர்களிடம் கூறியாதாவது: வக்பு வாரிய சட்ட திருத்தத்தை கண்டித்து, அதை திரும்பப் பெற வேண்டும் என்றும், நாடாளுமன்றத்தில் அச்சட்டத்தை தாக்கல் செய்யக்கூடாது என்றும் வலியுறுத்தும் விதமாக தமிழக சட்டப்பேரவையில் கடந்த 27ம் தேதி தீர்மானம் நிறைவேற்றப்பட்டு மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டது.

இருப்பினும் நாடாளுமன்றத்தில் பலம் உள்ளது என்ற ஒரே காரணத்திற்காக ஜனநாயகத்தின் குரல்வளைகளை நெரித்து எதிர்க்கட்சிகளின் கருத்துக்களை மதிக்காமல், அவர்களது திருத்தங்களை ஏற்றுக்கொள்ளும் பக்குவம் இல்லாமல், திமுக எம்பிகள் ராசா, அப்துல்லா உறுப்பினர்களாக உள்ள கமிட்டியில் சொன்ன திருத்தங்கள் கொண்டு வர முன்வராத கமிட்டி, எதிர்ப்பு கருத்து உடையவர்களை இடைநீக்கம் செய்துள்ளது.

ஒரு மசோதவை நிறைவேற்று வதற்கு முன்பு நாடாளுமன்ற கூட்டுக் குழுவுக்கு அனுப்பும் போது அனைத்து கட்சி பிரதிநிதிகள் உள்ளனர், ஆனால் எதிர் கருத்து உள்ளவர்கள் இடைநீக்கம் செய்த முதல் முறையாக வரலாற்று பிழையை பாஜக செய்துள்ளது.

232 உறுப்பினர்கள் எதிர்ப்பு தெரிவித்தும், 288 பேர் ஆதரவு தெரிவித்ததால் சட்ட திருத்தம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இருப்பினும் இதற்காக சட்டப்போராட்டம் நடத்தப்படும் என முதல்வர் தெரிவித்துள்ளார். அந்தவகையில் காயிதே மில்லத் காலம் முதல் எதிர்காலம் வரை என்றென்றும் சிறுபான்மை மக்கள் பக்கம் திமுக நிற்கும் என்பதை உறுயளிக்கும் விதமாக இந்த போராட்டத்தை நடத்தியுள்ளோம்.

## சாத்தான்குளம் கொலை வழக்கு விசாரணை தாமதம் ஏன்? உயர் நீதிமன்றத்தில் சிபிஐ விளக்கம்

மதுரை, ஏப்.4

சாத்தான்குளம் தந்தை, மகன் கொலை வழக்கு விசாரணை நடந்து வரும் நீதிமன்றத்தில் நீதிபதி பணியிடம் காலியாக இருப்பதாலும், சாட்சிகளை அனைத்து தரப்பினரும் குறுக்கு விசாரணை நடத்துவதாலும் விசாரணை தாமதமாகி வருகிறது என உயர் நீதிமன்றத்தில் சிபிஐ தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



தூத்துக்குடி மாவட்டம் சாத்தான்குளத்தை சேர்ந்த ஜெயராஜ், அவர் மகன் பென்னிக்ஸ். இவர்களை கடந்த 2020ம் ஆண்டு ஜூன் 19ல் கரோனா ஊரடங்கு நேரம் தாண்டி செல்போன் கடையை திறந்து வைத்திருந்ததாக கூறி போலீஸார் விசாரணைக்காக காவல் நிலையம் அழைத்துச் சென்றனர். பின்னர் இருவரும் அடுத்தடுத்து உயிரிழந்தனர்.

இதையடுத்து தந்தை, மகனை அடித்துக் கொலை செய்ததாக காவல் ஆய்வாளர் ஸ்ரீதர், உதவி ஆய்வாளர்கள் பாலகிருஷ்ணன், ரகு கணேஷ், தலைமை காவலர்கள் முருகன், காவலர்கள் முத்துராஜா, செல்லத்துரை, தாமஸ் பிரான்சிஸ், வெயில் முத்து உட்பட 9 பேரை சிபிஐ போலீஸார் கைது செய்தனர்.

இந்த வழக்கு மதுரை சிபிஐ நீதிமன்றத்தில் விசாரிக்கப்படுகிறது. இந்நிலையில் காவல் ஆய்வாளர் ஸ்ரீதர் ஜாமீன் கோரி உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் மனு தாக்கல் செய்தார். இந்த மனு நீதிபதி சக்திவேல் முன்பு வியாழக்கிழமை விசாரணைக்கு வந்தது. அப்போது நீதிபதி, விசாரணை நீதிமன்றத்தில் விசாரணை ஏன் தாமதமாகி வருகிறது? என கேள்வி எழுப்பினார்.

அதற்கு சிபிஐ தரப்பில், “வழக்கை நாள் தோறும் விசாரிக்க வேண்டும் என உயர் நீதிமன்றம் ஏற்கெனவே உத்தரவிட்டுள்ளது. விசாரணை நீதிமன்றத்தில் நீதிபதி பணியிடம் காலியாக உள்ளது. பொறுப்பு நீதிபதி தான் விசாரணை நடத்தி வருகிறார். ஒரு மணி நேரம் சாட்சிகளிடம் குறுக்கு விசாரணை நடத்தப்படுகிறது. சாட்சிகளிடம் எதிரிகள் 9 பேர் தரப்பிலும் குறுக்கு விசாரணை நடத்தப்படுவதால் விசாரணை தாமதமாகி வருகிறது. காவல் ஆய்வாளர் ஸ்ரீதர் அவரே குறுக்கு விசாரணை நடத்தி வருகிறார்.

இதனால் விசாரணை மேலும் தாமதமாகிறது. இந்நிலையில் விசாரணையை 2 மாதத்தில் முடிக்க வேண்டும் என சார்பு ஆய்வாளர் ரகுகணேஷ் ஜாமீன் மனு மீதான தீர்ப்பில் உத்தரவிடப்பட்டுள்ளது.” எனத் தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து மனுதாரர் தரப்பில் கால அவகாசம் கோரப்பட்டது. பின்னர் சிபிஐ தரப்பில் பதில்மனு தாக்கல் செய்ய உத்தரவிட்டு விசாரணையை நீதிபதி ஒத்திவைத்தார்.

## தென்காசி காசிவிஸ்வநாதர் கோயில் கும்பாபிஷேகத்துக்கு இடைக்கால தடை: சென்னை ஐஐடி குழு ஆய்வுக்கு உத்தரவு

மதுரை, ஏப்.4

தென்காசி காசிவிஸ்வநாதர் கோயில் கும்பாபிஷேகத்துக்கு தடை விதித்து, கோயிலில் நடைபெற்று வரும் புனரமைப்பு பணிகள் குறித்து சென்னை ஐஐடி குழு ஆய்வு செய்யவும் உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.



தென்காசியைச் சேர்ந்த நம்பிராஜன், உயர்நீதிமன்ற மதுரை அமர்வில் தாக்கல் செய்த மனு: தென்காசி காசி விஸ்வநாதர் கோயிலில் ஏப். 7ல் கும்பாபிஷேகம் நடைபெறுகிறது. சமீபத்தில் கோயிலில் நூறு டிராக்டருக்கும் மேல் மண் அள்ளப்பட்டது. இதனால் கோயில் பாதுகாப்பு கேள்விக்குறியாகியுள்ளது. இதனால் கோயில் பாதுகாப்பை உறுதி செய்ய அரசு நிதி ஒதுக்கியது. இந்த நிதி முறையாக செலவிடப்படவில்லை.

அரசின் நிதியில் மோசடி செய்யப்பட்டதுடன், கோயிலின் ஸ்திரத்தன்மையும் கேள்விக்குறியாகியுள்ளது. இது தொடர்பாக பக்தர்கள் அளித்த புகார்கள் விசாரிக்கப்பட்ட போது கோயில் பணிகளை முழுமையாக முடிக்காமல் அரசின் நிதியில் மோசடி செய்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இருப்பினும் சம்பந்தப்பட்டவர்கள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. கோயில் ராஜகோபுரத்தில் பழுது சரி செய்யப்படாமலேயே வண்ணம் பூச்சு பணி நிறைவடைந்துள்ளது.

எனவே, கோயிலில் புனரமைப்பு பணிகள் முழுமையாக முடியும் வரை கும்பாபிஷேகம் நடத்துவதற்கு தடை விதித்தும், கோயில் புனரமைப்பு பணிகளின் தற்போதைய நிலை குறித்து ஆய்வு செய்ய வழக்கறிஞர் ஆணையர் நியமித்தும், கோயில் புனரமைப்பு பணிக்கு அரசு வழங்கிய நிதியில் மோசடி செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவும் உத்தரவிட வேண்டும்.

ஆகவே அருள்மிகு காசி விஸ்வநாதர் கோயிலின் புனரமைப்பு பணிகள் முழுமையாக நிறைவடையும் வரை கும்பாபிசேகம் நடத்த இடைக்கால தடை விதிப்பதோடு, புனரமைப்பு பணிகளின் தற்போதைய நிலை குறித்து ஆய்வு செய்ய வழக்கறிஞர் ஆணையரை நியமித்தும், கோயில் புனரமைப்பு பணிக்காக அரசு வழங்கிய நிதியை மோசடி செய்த நபர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கவும் உத்தரவிட வேண்டும்“ என கூறியிருந்தார். இவ்வாறு மனுவில் கூறப்பட்டிருந்தது.

இந்த மனுவை நீதிபதிகள் ஜெ.நிஷாபானு, எஸ்.ஸ்ரீமதி அமர்வு இன்று விசாரித்தது. அரசு தரப்பில், திருப்பணிகள் நூறு சதவீத பணிகள் முடிவடைந்து விட்டதாக தெரிவிக்கப்பட்டது. மனுதாரர் தரப்பில், கோயில் புனரமைப்பு பணிகள் முழுமையாக நிறைவடையவில்லை. அதற்கு முன்ப கும்பாபிஷேகம் நடத்துவது பக்தர்களின் பாதுகாப்புக்கு ஆபத்தாக அமையும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து நீதிபதிகள், கோயில் புனரமைப்பு பணிகள் முழுமையாக நிறைவடையும் முன்பு கும்பாபிஷேகம் நடத்துவது சரியல்ல. எனவே கும்பாபிஷேகத்துக்கு இடைக்கால தடை விதித்தும். கோயில் புனரமைப்பு பணிகள் குறித்து சென்னை ஐஐடி குழு மற்றும் வழக்கறிஞர் ஆணையர் ஆகியோர் ஆய்வு நடத்தி ஏப். 21ல் அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என உத்தரவிட்டனர்.

## சென்னையில் கார்ல் மார்க்ஸ் சிலை! ராமதாஸ் வரவேற்பு

சென்னை, ஏப்.4

சென்னையில் கார்ல் மார்க்ஸ் திருவுருவச் சிலை அமைக்கும் அரசின் முடிவு வரவேற்கத்தக்கது என பாமக நிறுவனர் ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டிருக்கும் அறிக்கையில், “பொதுவுடைமை புரட்சியாளர் கார்ல் மார்க்ஸுக்கு சென்னையில் திருவுருவச் சிலை அமைக்கப்படும் என்று சட்டப்பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்திருக்கிறார்.

ஜெர்மனியில் பிறந்து உலகம் முழுவதும் வாழும் பாட்டாளிகளின் தோழராக உருவெடுத்த கார்ல் மார்க்ஸுக்கு சென்னையில் சிலை எடுப்பது அவருக்கு செய்யப்படும் பெரும் சிறப்பு ஆகும் என்று தெரிவித்துள்ளார். ஏற்கெனவே தைலாபுரத்தில் மார்க்ஸுக்கு சிலை வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.



# பொழிச்சலூர் ஊராட்சி பகுதி தவெக சார்பில் 6 இடங்களில் தண்ணீர் பந்தல் திறப்பு



பொழிச்சலூர் ஏப்.4

சென்னை அடுத்த செங்கல்பட்டு வடக்கு மாவட்டம் பரங்கிமலை வடக்கு ஒன்றியம் பொழிச்சலூர் ஊராட்சி பகுதி தலைமை தமிழக வெற்றி கழகம் சார்பில் தண்ணீர் பந்தல் திறப்பு விழா மாவட்ட செயலாளர் மின்னல் குமார் தலைமையில் நடைபெற்றது. முன்னதாக மேள, தாளத்துடன் நேரு நகர், வெங்கடேஸ்வரா நகர் பேரூந்து, ஆவின்பால் நிலையன், சிவன் கோவில், பஜனை கோவில், பொழிச்சலூர் பேரூந்து நிலையம் என 6 இடங்களில் மாவட்ட செயலாளர் மின்னல் குமார் தண்ணீர் பந்தலை திறந்து வைத்து பொதுமக்கள் தாகம் தீர்க்க தர்பூசனி, நீர்மோர், குளிர்பானங்கள், வெள்ளிரிக்காய் உள்ளிட்டவைகளை வழங்கினர் இதில் மாவட்ட நிர்வாகிகள், பொழிச்சலூர் பகுதி, வார்டு, தகவல் தொடர்பு பிரிவு, மகளிர் அணி, இளைஞரணி, தொண்டரணி நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்..

# காரைக்குடியை சேர்ந்த தமிழக அணி சார்பில் வீல் சேர் கிரிக்கெட் போட்டியில் சாம்பியன் பட்டம்




காரைக்குடி, ஏப்.4

சிவகங்கை மாவட்டம் காரைக்குடியைசேர்ந்த வீரர்கள் தமிழக அணி சார்பில் தேசிய அளவிலான வீல்சேர் கிரிக்கெட் போட்டியில் சாம்பியன் பட்டம் வென்று சாதனை படைத்தனர்.

தேசிய அளவில் 8 மாநிலங்கள் பங்கு பெற்ற சேர் கிரிக்கெட் போட்டியை மானஸ் சாரிடபிள் டிரஸ்ட் நடத்தியது.,இந்த மானஸ்கப் 2025 போட்டியானது மார்ச் மாதம் 23கூீபீ இதில் தமிழ்நாடு அணி 3 லீக் போட்டி ஒரு செம்மி பைனல் மற்றும் பைனல் போட்டி என அனைத்திலும் தோல்வியை சந்திக்காமல் இறுதிப்போட்டியில் குஜராத் அணியை வீழ்த்தி சாம்ப்பியன் பட்டத்தை தமிழ்நாடு அணியினர் வென்று சாதித்து உள்ளனர்.

குறிப்பாக இதில் நம்ம காரைக்குடி சேர்ந்த நான்கு வீரர்கள் ராமசந்திரன் (கேப்டன்), குமார்,கோபி பங்கு பெற்று நமது மண்ணிற்கு பெருமை சேர்த்துள்ளனர் இதனை பொதுமக்கள், சமூக ஆர்வலர்கள், அரசியல் கட்சி தலைவர்கள் என அனை வரும் பாராட்டுவது குறிப்பிடத்தக்கது.

# காரைக்குடி அழகப்பா அரசு கலைக் கல்லூரிக்கு முன்னாள் மாணவர்கள் இன்வெர்ட்டர் வழங்கும் நிகழ்வு




சிவகங்கை, ஏப்.4

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி அழகப்பா அரசு கலைக் கல்லூரி ஆங்கிலத்துறையில் 2002 -2005ல் பயின்ற முன்னாள் மாணவர்கள் துறைக்கு யூபிஎஸ் மற்றும் இன்வெர்ட்டர் வழங்கும் நிகழ்வு நடைபெற்றது. இந்நிகழ்வில் உதவி பேராசிரியர் க.சோமசுந்தரம் வரவேற்புரை நிகழ்த்தினார். அதனை தொடர்ந்து முன்னாள் மாணவர்களை சிறப்பிக்கும் வண்ணமாக பொன்னாடை அணிவிக்கப்பட்டது, முன்னாள் மாணவர்கள் தற்போதைய பேராசிரியர்களுக்கு பொன்னாடை அணிவித்து கௌரவப்படுத்தினர். மேலும் முன்னாள் மாணவர்கள் துறைக்கு பேட்டரி மற்றும் இன்வெர்ட்டர் வழங்கினர், அதனைத் தொடர்ந்து தற்போதைய துறை தலைவர் ஜெயசாலா வாழ்த்துரை வழங்கினார். முன்னாள் மாணவியும் சேலம் சாரதா மகளிர் கல்வியல் கல்லூரி இணைபேராசியை கமலாதேவி 20 வருடங்களுக்கு முன்பு ஆங்கில துறையில் பயின்ற அனுபவங்களையும், தற்போதைய கல்விமுறை குறித்தும் மாணவர்களிடம் பகிர்ந்துக்கொண்டர். மேலும் முன்னால் மாணவரும், சென்னை உயர்நீதிமன்ற வழக்குரைஞர் சிவசுப்பிரமணியன் மாணவர்களிடம் தங்கள் அனுபவங்களை பகிர்ந்து கொண்டார். இந்த நிகழ்வில் முன்னாள் மாணவர்கள் சத்யா,சந்திரசேகர் மற்றும் பேராசிரியபெருமக்கள்,மாணவ மாணவியர் கலந்து கொண்டனர். இறுதியாக முன்னாள் மாணவரும், அழகப்பா அரசு காலைக் கல்லூரி ஆங்கில துறை உதவி பேராசிரியர் முனைவர் கா.பஞ்சாட்சரம் நன்றியுரை கூறினார்.




கன்னியாகுமரி மாவட்டம் குலசேகரபுரம் அருகே பெற்ற தாய்க்கு பக்கவாதம் ஏற்பட்டு பாதிக்கப்பட்ட 85வயது தாயை வீட்டில் பாதுகாப்பதாக கூறி தாயின் பெயரில் இருந்த 72 சென்ட் நிலத்தை மிரட்டி எழுதி வாங்கி விட்டு கழுத்தில் கிடந்த 5 அரை பவுன் தங்க செயின் மற்றும் வங்கியில் இருந்த ஒரு லட்சம் ரூபாய் பணத்தையும் மிரட்டி வாங்கி ஏமாற்றிய மகன் மீது நடவடிக்கை எடுக்க கோரி தள்ளாத வயதில் நாகர்கோவில் ஆட்சியர் அலுவலகத்தில் வந்து புகார் மனு அளித்த தாய் தந்தையர்கள்..

# கன்னியாகுமரி சின்னமுட்டம் துறைமுகத்தில் ஏப்.15 முதல் மீன்பிடித் தடை



கன்னியாகுமரி. ஏப்.4

ஆழ்கடலில் மீன்கள் இனப்பெருக்கம் செய்யும் காரணமாக, கன்னியாகுமரி சின்னமுட்டம் துறைமுகத்தில் ஏப்ரல் 15 முதல் ஜூன் 15 வரை (61 நாட்கள்) தமிழகத்தின் கிழக்குக் கடற்கரை பகுதியில் விசைப்படகுகளின் மீன்பிடிக்கு தடை விதிக்கப்படுகிறது.

இதனால், சின்னமுட்டம் மீன்பிடித் துறைமுகத்தில் 350 க்கும் மேற்பட்ட விசைப்படகுகள் மீன் பிடிக்க தடை இருக்கும். மீன்களின் கிடைக்கும் அளவு குறைவதால், மீன் விலை உயரக் கூடும் என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.

# தாம்பரத்தில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. மருத்துவ அணி சார்பில் மாபெரும் மருத்துவ முகாம்



தாம்பரம் ஏப்.4

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்தநாளை முன்னிட்டு தாம்பரம் மேற்கு 49வது வார்டில் அமைந்துள்ள பாபு மகப்பேறு மருத்துவமனையில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. மருத்துவ அணி தலைவர் டாக்டர் ஆர்.எஸ். கிருத்திகாதேவி அவர்கள் தலைமையில் நடைபெற்ற மாபெரும் பல்நோக்கு மருத்துவ முகாம் மற்றும் இரத்த தான முகாமிற்கு சிறப்பு அழைப்பாளராக காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக செயலாளரும், குறு சிறு நடுத்தர தொழில் நிறுவனங்களின் துறை அமைச்சருமான தா.மோ.அன்பரசன் கலந்துகொண்டு மருத்துவ முகாமை துவக்கி வைத்தனர்.

இந்நிகழ்ச்சியில் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி, தாம்பரம் மாநகராட்சி துணை மேயர் கோ.காமராஜ், காஞ்சிபுரம் மாவட்ட குழு தலைவர் படப்பை ஆ.மனோகரன், தலைமை செயற்குழு உறுப்பினர் ஆதிமாறன், பம்மல் வடக்கு பகுதி கழகச் செயலாளர் தா.ஜெயக்குமார், தமுமுகவின் மாநிலத் துணைப் பொதுச் செயலாளர் தாம்பரம் எம்.யாகூப், பகுதி கழக நிர்வாகிகள் வட்ட கழக நிர்வாகிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# திருப்பூர் உடுமலைப்பேட்டை அலுவலகத்தில் காலியாக ஒன்று ஈப்பு ஓட்டுநர் பணியிடத்திற்கு ஆள்தேர்வு

திருப்பூர், ஏப்.4

திருப்பூர் உடுமலைப்பேட்டை அலுவலகத்தில் காலியாக ஒன்று ஈப்பு ஓட்டுநர் பணியிடத்திற்கு தகுதியான நபர்கள் தேர்வு செய்யப்பட உள்ளனர்.

நீர்வளத்துறை, கண்காணிப்புப் பொறியாளர் மா.கார்த்திகேயன் தகவல் கண்காணிப்புப்பொறியாளர் அலுவலகம், நீவது., பரம்பிக்குளம் ஆழியார் வடிநில வட்டம், பொள்ளாச்சியின் கட்டுப்பாட்டில் உள்ள செயற்பொறியாளர், நீவது., திருமூர்த்திக் கோட்டம், உடுமலைப்பேட்டையின் கீழ் உள்ள உதவி செயற்பொறியாளர், நீவது., மண் அணை உபகோட்டம், திருமூர்த்தி நகர் அலுவகத்தில் காலியாக உள்ள ஒன்று (1) ஈப்பு ஓட்டுநர் பணியிடத்திற்கு (ஊதிய ஏற்ற முறை (19500 71900)) தகுதியான நபர்கள்; தேர்வு செய்யப்பட உள்ளனர். இதற்காக வேலைவாய்ப்பகம் பரிந்துரைக்கும் நபர்கள் தவிர, இதர தகுதியுள்ள நபர் தங்களது ஓட்டுநர் உரிமம், வயது சான்று, கல்வி சான்று, சாதி சான்று, குடும்ப அட்டை நகல், ஆதார் அட்டை நகல், ஓட்டுநர் பணியில் மூன்றாண்டு முன் அனுபவச்சான்று மற்றும் உடற்தகுதிச்சான்று ஆகியவற்றின் சுயசான்றொப்பமிட்ட நகல்களுடன் கண்காணிப்புப்பொறியாளர் அலுவலகம், நீவது., பரம்பிக்குளம் ஆழியார் வடிநில வட்டம், பொள்ளாச்சி 3 என்ற முகவரிக்கு விண்ணப்பிக்க வேண்டும். விண்ணப்பங்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் : 30.04.2025 ஆகும்.

காலிப்பணியிட விவரம்

1.பட்டியல் வகுப்பினர் (முன்னுரிமையற்றோர்): 01எண்கள் ஓட்டுநர் பணிக்கு தகுதிகள் : கல்வித்தகுதி 8ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். இலகுரக வாகன ஓட்டுநர் உரிமம் பெற்றிருக்க வேண்டும். இலகுரக வாகனங்களை ஓட்டுவதில் மூன்று வருட முன் அனுபவம் பெற்றிருக்க வேண்டும். நல்ல உடல் ஆரோக்கியமும் தெளிவான கண்பார்வையும் இருக்க வேண்டும். 01.07.2024 அன்று பட்டியல் சாதியினர் (முன்னுரிமை பெற்றாதவர்கள்) 37வயதிற்கு மேற்படாதவராகவும், 18 வயது நிரம்பியவராகவும் இருக்க வேண்டும்.

குறிப்பிட்ட தேதிக்குப்பின்னர் வரும் விண்ணப்பங்கள் எக்காரணத்தைக் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. காலதாமதத்திற்கு துறை நிர்வாகம் பொறுப்பேற்காது.என நீர்வளத்துறை, கண்காணிப்புப் பொறியாளர் மா.கார்த்திகேயன் தெரிவித்துள்ளார்

# சாயக் கழிவுகள் கலப்பால் மஞ்சள் நிறத்திற்கு மாறிய மேட்டுப்பாளையம் பவானி ஆறு! மக்கள் அதிர்ச்சி



கோவை ஏப்.4

கோவை மாவட்டம், மேட்டுப்பாளையம் அடுத்துள்ள சிறுமுகை பகுதியில் ஓடும் பவானி ஆற்று நீர் மஞ்சள் நிறத்தில் காட்சி அளிப்பதால் இப்பகுதி மக்கள் அதிர்ச்சி அடைந்து உள்ளனர்.

கோவை, மேட்டுப்பாளையம் அடுத்து உள்ள சிறுமுகை பகுதியில் பவானி ஆற்றில் இருந்து ஆறு கூட்டு குடிநீர் திட்டங்களுக்கு தண்ணீர் எடுக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில் சிறுமுகை பகுதியில் கடந்த இரு மாதங்களாக அடிக்கடி ஆற்று நீர் மாசடைந்து நிறம் மாறி காணப்பட்டதை அடுத்து இதுகுறித்து அப்பகுதி மக்கள் மாவட்ட நிர்வாகத்திடமும் மாசு கட்டுப்பாட்டு வாரியத்திடமும் புகார் அளித்தனர்.

புகாரின் பேரில் மாசு கட்டுப்பாட்டு அதிகாரிகள் சம்பவ இடத்தில் கடந்த மாதத்தில் மட்டும் இருமுறை ஆய்வு நடத்தினர். ஆற்று நீர் மாதிரியை சேகரித்து ஆய்விற்கும் எடுத்து சென்றனர். ஆனால், அதன் பின் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. ஆற்றில் சாயக் கழிவுகளை கலக்க விடும் தனியார் ஆலைகளை கண்டு அறிந்து அவற்றின் மீது நடவடிக்கையும் எடுக்கவில்லை என அப்பகுதி மக்கள் வேதனை தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில், கடந்த இரு நாட்களாக அதே பகுதியில் பவானி ஆற்றின் தண்ணீர் மஞ்சள் நிறத்தில் மாறி முற்றிலும் மாசடைந்து காணப்படுகிறது. இதனால் இத்தண்ணீரை குடிநீராக பயன்படுத்தி வரும் சிறுமுகை சுற்று வட்டார கிராம மக்கள் இனி யாரிடம் புகார் தெரிவிப்பது என செய்வதறியாது திகைப்பில் ஆழ்ந்து உள்ளனர்.

உடனடியாக இவ்விஷயத்தில் தமிழக அரசு தீவிர கவனம் செலுத்தி உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கின்றனர்.

# கொடைக்கானலில் இரண்டு நாட்களாக கனமழை ஆர்ப்பரித்து கொட்டும் வெள்ளி நீர்வீழ்ச்சி




கொடைக்கானல், ஏப்.4

திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானலில் கடந்த மூன்று மாதத்திற்கு மேலாக மழை இல்லாத காரணத்தினால் கொடைக்கானல் வெப்பம் நிலவி காணப்பட்டது. இந்நிலையில் கடந்த இரண்டு நாட்களாக கனமழை பெய்து வருவதால் கொடைக்கானல் குளிர்ந்த கால நிலை நிலவி வருகிறது மேலும் கொடைக்கானல் வரும் சுற்றுலாப் பயணிகளை வரவேற்கும் விதமாக கொடைக்கானல் நுழைவாயிலில் அமைந்துள்ள வெள்ளி நீர்வீழ்ச்சி நீர் வரத்து அதிகமாக ஏற்பட்டு ஆர்ப்பரித்து கொட்டுவதால் சுற்றுலா பயணிகள் மிகவும் ஆச்சரியத்துடன் கண்டு செல்ஃபி மற்றும் புகைப்படம் எடுத்து மகிழ்ந்து வருகின்றனர்.



மதுரை மாவட்டம் பேரையூர் வட்டம் பெருங்காமநல்லூரில் உள்ள வீர தியாகிகள் நினைவு மண்டபத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் ம.சௌ.சங்கீதா மாலை அணிவித்து மலர்தூவி அஞ்சலி செலுத்தினார்.




பயன்பாடு இல்லாத நெகிழி மூலமாக உருவாக்கப்பட்ட குப்பைத் தொட்டியை அனைத்து குழந்தைகள் ( ALL THE CHILDREN ) அறக்கட்டளை சார்பில் அல் அமீன் மேல்நிலைப்பள்ளிக்கு வழங்கப்பட்டது நிகழ்வில் தலைமையாசிரியர் ஷேக் நபி, ஆசிரியர்கள், அறக்கட்டளை ஊழியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர்.






செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சி 1வது மண்டலம் மாமன்ற கூட்டம் 1வது மண்டலம் குழுத் தலைவர் பம்மல் தெற்கு பகுதி கழக செயலாளர் வே.கருணாநிதி அவர்கள் தலைமையில் நடைப்பெற்றது. இக்கூட்டத்தில் உதவி ஆணையாளர் சொர்ணலதா, மாநகராட்சி உதவி செயற்பொறியாளர் சத்தியசீலன், மாமன்ற உறுப்பினர்கள் இரா.நரேஷ்கண்ணா, ஆ.மதினாபேகம், கலைவாணி பிரபு, வாணிஸ்ரீ விஜயகுமார், சித்ரா தமிழ்குமரன், கல்யாணி டில்லி, மு.இன்பசேகர், ரம்யா சத்தியபிரபு, சத்யா மதியழகன், சித்ராதேவி முரளிதரன், மண்டல கண்காணிப்பாளர், பொதுப்பணி மேற்பார்வையாளர்கள், சுகாதார அலுவலர் மற்றும் மண்டல பணியாளர்கள் கலந்துகொண்டனர்.



நீலகிரி மாவட்டம் ஊசி மலையில் சுற்றுலாவிற்கு வந்த கேரளாவைச் சார்ந்த ஜாபர் (23) என்பவர் தேனீக்கள் கொட்டியதால் உயிரிழந்தார். அவரது நண்பர்கள் லேசான காயத்துடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இச்சம்பவம் குறித்து காவல்துறையினர் விசாரணை செய்து வருகின்றனர்.



கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் மாநகராட்சியில் மேயர் மகேஷ் தலைமையில் , ஆணையர் நிஷாந்த் கிருஷ்ணா முன்னிலையில் இயல்பு மக்கள் குறைத்தீர்க்கும் நாள் முகாம் நடைப்பெற்றது. உடன் மாநகராட்சி அதிகாரிகளும் கலந்து கொண்டனர். முகாமில் மக்களுடைய கோரிக்கை மனுக்கள் வாங்கப்பட்டது, துறைச்சார்ந்த அதிகாரிகளிடம் கடந்த காலத்தில் பெறப்பட்ட மனுக்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றியும் அதிகாரிகளிடம் கேட்டறிந்து கால தாமதமின்றி மக்கள் கோரிக்கைகள் நிறைவேற்றபட வேண்டும் என அதிகாரிகளுக்கு வலியுறுத்தப்பட்டது.

# சிவகங்கையில் மாணவர்களுக்கு தொழில் மற்றும் வேலைவாய்ப்பு படிப்புகள் குறித்த வழிகாட்டி ஆலோசனை முகாம்

சிவகங்கை, ஏப்.4



சிவகங்கை மாவட்டத்தில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையால் “என் கல்லூரி கனவு” எனும் உயர்கல்வி வழிகாட்டுதல் திட்டத்தின் கீழ் 2025 ஆம் கல்வியாண்டிற்கான 12ஆம் வகுப்பு மாணாக்கர்களுக்கு தொழில் மற்றும் வேலைவாய்ப்பு அதிகமுள்ள படிப்புகள் குறித்த வழிகாட்டி ஆலோசனை முகாம், தன்னார்வ இயக்கத்தின் துணையுடன் வருகின்ற 06.04.2025 அன்று காலை 09.00 மணியளவில் சிவகங்கை, அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி கலையரங்கத்தில் நடைபெறவுள்ளது.

எனவே, மாணாக்கர்கள் இவ்வழிகாட்டி ஆலோசனை முகாமில் கலந்து கொண்டு பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித், தெரிவித்துள்ளார்.

# சிவகங்கை மாவட்டம் காரைக்குடி அழகப்பா அரசு கலை கல்லூரியில் 77 ஆம் ஆண்டு விளையாட்டு விழா





சிவகங்கை, ஏப்.4

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி அழகப்பா அரசு கலைக் கல்லூரியில் 77 ஆம் ஆண்டு விளையாட்டு விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. கல்லூரியில் நடைபெற்று வரும், ஐம்பெரும் விழாவின் முதல் நாள் நிகழ்வாக கல்லூரியின் 77 ஆம் ஆண்டு விளையாட்டு விழா இன்று நடைபெற்றது. கல்லூரி முதல்வர் முனைவர் பெத்தாலெட்சுமி தலைமை வகித்து விளையாட்டு விழாவின் சிறப்புகளையும், மாணவர்கள் பல்வேறு போட்டிகளில் கலந்து கொண்டு பரிசு பெற்றதைப் பாராட்டியும் பேசினார். கல்லூரியின் விளையாட்டுக் குழு உறுப்பினரும், தாவரவியல் துறைத் தலைவருமான முனைவர் கோமளவல்லி வரவேற்புரை ஆற்றினார். அழகப்ப செட்டியார் அரசு பொறியியல் கல்லூரியின் மேனாள் உடற்கல்வி இயக்குநர் முனைவர் விஸ்வலிங்கம் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கி சிறப்புரையாற்றினார். கல்லூரியின் முன்னாள் மாணவரும் தற்போதைய சிவகங்கை மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் செயலாளர் சதீஷ்குமார் மற்றும் கல்லூரியின் முன்னாள் மாணவரும் மதுரை காமராஜ் பல்கலைக்கழகத்தின் கால்பந்தாட்ட வீரருமான ராமநாதன் ஆகியோரும் கலந்துகொண்டு சிறப்பித்தனர். கல்லூரியின் விளையாட்டுக் குழு உறுப்பினரும், ஆங்கிலத்துறை இணைப் பேராசிரியருமான சமுனா ஜெரின் அறச்செல்வி நன்றி உரையாற்றினார். விழாவில் ஏராளமான பேராசிரியர்களும், ஆசிரியர்களல்லாப் பணியாளர்களும் மாணவ மாணவிகளும் கலந்து கொண்டனர்.

# மஞ்சூரில் சில்லஹல்லா அணை திட்டத்தை கைவிடக்கோரி விளக்கக் கூட்டம்

குன்னூர்,ஏப்.4



நீலகிரி மாவட்டம் மஞ்சூர் அருகே குந்தா நதியின் துணை நதியான சில்லஹல்லா ஆற்றின் குறுக்கே பிகுளி பாலம் அருகே அணை கட்டி ரூ.7 ஆயிரம் கோடி மதிப்பிட்டில் ரூ.2 ஆயிரம் மெகாவாட் திறன் கொண்ட சில்லஹல்லா நீர்மின் திட்டம் செயல்படுத்தப்படும் என கடந்த 2013 ஆண்டு அப்போதைய தமிழக முதல்வர் ஜெயலலிதா அறிவித்தார். இதனை தொடர்ந்து இத்திட்டத்திற்கான ஆயத்த பணிகள் மேற்கொள்ளப்பட்டது. சில்லஹல்லா நீர் தேக்கம் அமைய உள்ள பகுதியில் மின்வாரிய தரப்பில் பல கட்ட ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டது. இதை தொடர்ந்து ஒரே கட்டமாக 2 ஆயிரம் மெகாவாட் திறன் கொண்ட சில்லஹல்லா நீர்மின் திட்டத்தை நிறைவேற்றும் அளவிற்கு தொழில்நுட்பங்களோ, அல்லது இயந்திர வடிவமைப்புகளோ இல்லாதால் இதனை நிறைவேற்றுவது சிரமம் என்பதால், இத்திட்டம் கைவிடப்படுவதாகவும், அதற்கு பதிலாக தலா ஆயிரம் மெகாவாட் மின் உற்பத்தி செய்யும் வகையில் இரு கட்டங்களாக செயல்படுத்தும் வகையில் மறு ஆய்வு செய்யப்பட உள்ளதாக கடந்த 2017ம் ஆண்டு மின்வாரிய தரப்பில் தீர்மானிக்கப்பட்டது. இதை தொடர்ந்து சில்லஹல்லா நீரேற்று புனல் மின் நிலைய திட்டத்திற்கான பணிகள் துவக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு கடந்த 2020ம் விரிவான திட்ட மதிப்பீடு தயாரிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டதாக கூறப்படுகிறது. இதன்படி தலா ஆயிரம் மெகாவாட் உற்பத்தி செய்யும் திட்டமாக மாற்றியமைக்கப்பட்டு கன்னேரி ஸ்ரீராம்நகர் அருகே பெம்பட்டி ஆடா மற்றும் குந்தாபாலம் அன்னமலை முருகன் கோயில் அடிவார பகுதி என இரு இடங்களில் அணைகள் கட்ட திட்டமிடப்பட்டு உள்ளது. இது நீர்மின் நிலையமாக மட்டுமின்றி, நீரேற்று குகை மின் நிலையமாக அமைக்கப்பட உள்ளது. இதற்காக 123.3 ஹெக்டர் வனத்துறை நிலம், 57 ஹெக்டர் அரசு நிலங்கள் மற்றும் 134.7 ஹெக்டர் என மொத்தம் 315 ஹெக்டர் நிலம் தேவை என மதிப்பிடப்பட்டுள்ளது. இந்நிலையில் கடந்த 2020ம் ஆண்டு சில்லஹல்லா நீரேற்று மின் நிலையத்திற்கான ஆயத்த பணிகள் துவக்கப்பட்ட போதே பாதுகாக்கப்பட்ட உயிர் சூழல் மண்டலமாக உள்ள நீலகிரியில் இத்திட்டத்தை செயல்படுத்த கூடாது என 15 கிராம மக்கள் எதிர்ப்பு தெரிவித்தனர். இந்நிலையில், சில்லஹல்லா பாதுகாப்பு இயக்கத்தின் சார்பில் சில்லஹல்லா விழிப்புணர்வு பொதுகூட்டம் மஞ்சூரில் நடைபெற்றது.

சில்லஹல்லா நீர் பிடிப்பு பகுதி பாதுகாப்பு குழு தலைவர் சிவலிங்கம், தமிழ் மாநில சட்ட மைய இயக்குனர் வழக்கறிஞர் புயல் விஜயன், விவசாயிகள் சங்க தலைவர் வழக்கறிஞர் ஜே.பி.சுப்ரமணி, வழக்கறிஞர் ராஜேஸ்வரி தேவபெட்டன், அருண்பெள்ளி, நாக்குபெட்டா மணிவண்ணன், இளம் படுகர் சங்க நிர்வாகி ராமன், வழக்கறிஞர் வீரமதிவாணன், படுக தேச பார்ட்டி நிறுவன தலைவர் மஞ்சை மோகன், தோடர் இன தலைவர்கள் மந்தேஷ்குட்டன், ஜெய்சின், ஜானார்தனன், சுர்ஜித், மஞ்சூர் நஞ்சன், வழக்கறிஞர்கள் நந்தினி, சூர்யா, விஜய்பசவராஜ், சுற்றுச்சூழல் ஆர்வலர் அஜித்பாபு பிரேமா உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் கலந்துகொண்ட சில்லஹல்லா நீர் மின் நிலைய திட்டத்தால் ஏற்படகூடிய பாதிப்புகள் குறித்து விளக்கி பேசினார்கள். நீரோடையின் குறுக்கே அணை கட்டுவதால் கழிவுகள் கலந்த தண்ணீர் தேங்கி பொது மக்களுக்கு பாதிப்பு ஏற்படும் அபாயம் உள்ளது நிலங்கள் கையகப்படுத்தப்பட உள்ளது. விவசாயிகள் நிலங்கள் அனைத்தும் கூட்டு பட்டாவில் உள்ளது. பூமியை குடைந்து மேற்கொள்ளப்படும் இத்திட்டதால் இயற்கை இடர்பாடுகள் ஏற்பட வாய்ப்புள்ளது. சுற்றுச்சூழல் கடுமையாக பாதிக்கும், தென்னிந்தியாவின் நீர் தொட்டியான நீலகிரி நீரில் முழுகாமல் காக்க வேண்டும். நீலகிரி மட்டுமின்றி இத்திட்டத்தால் கோவை மாவட்டமும் பாதிக்கும் எனவே அரசு கைவிட வேண்டும் என வலியுறுத்தினார்கள்.

இதை தொடர்ந்து திரைப்பட பாடகர் பெள்ளிராஜ் சில்லஹல்லா பாதிப்பை விளக்கும் பாடல்கள் அடங்கிய இசை தட்டை வெளியிட்டார். நீலகிரி ஆவண காப்பக தலைவர் வேணுகோபால் பெற்றுக்கொண்டார். இதில் மணியட்டி, கன்னேரி மந்து, தங்காடு, ஓரநள்ளி, பாலகொலா, பெங்கால்மட்டம், தேனாடு, மைனலாமட்டம் உள்பட பல்வேறு கிராமங்களை சேர்ந்த தலைவர்கள், முக்கிய பிரமுகர்கள், பொதுமக்கள் உள்பட நூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்டார்கள்.

முடிவில் மனேஸ் சந்திரன் நன்றி கூறினார். விழிப்புணர்வு இதனை ஒட்டி ரூரல் டி.எஸ்.பி.ராஜ்குமார் மேற்பார்வையில் பலத்த போலீஸ் பாதுகாப்புபணியில் ஈடுபட்டிருந்தனர்.




திருப்பூர் மாநகரம் காங்கேயம் சாலை பகுதியில் எஸ்.டி.பி.ஐ கட்சி சார்பில் திருப்பூர் வடக்கு மாவட்ட சார்பாக வக்ஃப் திருத்த சட்டத்தை ஏற்க மறுத்து திருப்பூர் சி.டி. சி கார்னர் அருகே மாவட்ட பொதுச் செயலாளர் அப்துல் வஹாப் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.



திருப்பூர் மாவட்ட ஆட்சியர் பெருந்திட்ட வளாகத்தில் கோடை காலத்தை முன்னிட்டு பொதுமக்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் தா.கிறிஸ்துராஜ் நீர்மோர் வழங்கினர்.உடன் மாவட்ட வருவாய் அலுவலர் கார்த்திகேயன் மற்றும்உதவி திட்ட அலுவலர் மகளிர் திட்டம் சம்பத் ஆகியோர் உள்ளனர்.



தேனி மாவட்டம் சின்னமனூரை ஒட்டிய வேப்பம்பட்டி கிராமத்தில் மதுரை வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் இறுதியாண்டு பயிலும் மாணவி மூ.நிவேதா கிராமத் தங்கல் திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு கிசான் அழைப்பு எண் என்ன என்பது பற்றி விழிப்புணர்வு கூட்டம் நடத்தினார்.பயிர் சாகுபடிக்கு தேவையான விதைகள்,உரங்கள்,வானிலை முன்னறிவுப்பு , தமிழ்நாடு அரசு செயல்படுத்தும் மானிய திட்டங்கள், விளைச்சல் அதிகரிக்கும் தொழில்நுட்பங்கள் போன்று பல்வேறு இடங்களுக்கு சென்று தெரிந்துகொள்ள வேண்டிய தகவல்களையும் விளைப் பொருட்களுக்கு இலாபகரமான விலை கிடைப்பதற்கான வழிமுறைகளையும் விவசாயிகளின் கைபேசி மூலமாக வழங்குவதே கிசான் அழைப்பு எண்ணின் முக்கியமான நோக்கம் எனக் கூடியிருந்த விவசாயிகளுக்கு விளக்கினார்.

## வத்தலக்குண்டுவில் துரை வைகோ பிறந்தநாள் கொண்டாட்டம்




வத்தலகுண்டு ஏப்.4

திண்டுக்கல் மாவட்டம் வத்தலக்குண்டு மறுமலர்ச்சி திமுக தெற்கு ஒன்றியத்தின் சார்பாக துரை வைகோ அவர்களின் 53 பிறந்தநாள் விழாவை வெகு விமர்சையாக கொண்டாடப்பட்டது

தெற்கு ஒன்றியத்தின் சார்பாக மதிமுக கொடிக்கம்பத்திற்கு வர்ணம் தீட்டி புது நூல் மாற்றி கழகக் கொடியேற்றி இனிப்பு வழங்கிய பின்பு கிராம கோயில்கள் தோறும் சிறப்பு வழிபாடு செய்து துரைவைகோ 100 ஆண்டுகள் வாழ வேண்டும் கட்சிப் பணி சிறப்பாக செய்திட வேண்டும் என்றும் என்றும் பிரார்த்தனை செய்யப்பட்டது பின்பு திண்டுக்கல் மாவட்ட கழகம் சார்பில் மாவட்ட செயலாளர், உயர்நிலைக்குழு உறுப்பினர் என்.செல்வராகவன் தலைமையில் மாவட்ட கழக அலுவலகத்தில் மாவட்டக் கழக அலுவலகத்தில் கேக் வெட்டியும், முதன்மைச் செயலாளர் துரைவைகோவை வாழ்த்தி கோஷங்கள் எழுப்பப்பட்டன

கலந்து கொண்ட கழகத் தோழர்கள் தங்களது மகிழ்ச்சியை பகிர்ந்து கொண்டனர் திண்டுக்கல் மனவளர்ச்சி குன்றிய 70 க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகளுக்கு இனிப்புகளுடன் கூடிய உணவு மாவட்டச் செயலாளர் செல்வராகவன் தலைமையில் வழங்கி அன்பை பகிர்ந்து கொண்டனர் இந்நிகழ்ச்சியில் மாவட்ட நிர்வாகிகளுடன் வத்தலக்குண்டு தெற்கு ஒன்றிய செயலாளர் வால்டர் ராஜா நகரச் செயலாளர் அல்லா பிச்சை ஜெயராம் ஜெயராஜ் மற்றும் கழக நிர்வாகிகள் சார்பு அணியினர் என பலர் கலந்து கொண்டனர்

## கிராம தலைவரை தேர்ந்தெடுத்தது தொடர்பாக இருதரப்பினரிடையே ஏற்பட்ட மோதலில் 8 பேர் மீது வழக்கு...!

சிவகங்கை ஏப்04

காளையார்கோவில் சிறுசெங்குளிபட்டி கிராமத்தை சேர்ந்த கருப்பையா மகன் பாண்டி இவர் டாஸ்மாக்கில் சூப்பர் வைசராக பணியாற்றி வருகிறார். அவரது மனைவி ரஷ்யா சுகாதரா ரதுறையில் பகுதி சுகாதார மேற்பார்வையாளராக பணிபுரிந்து வருகிறார். கிராம தலைவர் பதவிக்கு தலைவரை தேர்ந்தெடுப்பதில் பாண்டி ஒரு தரப்பாகவும் அதே ஊரைச் சேர்ந்த சின்னையா மகன் கண்ணன் ஒரு தரப்பகவும் பிரிந்து செயல்பட்டதால் தலைவர் பதவிக்கு குழுக்கல் முறையில் கண்ணன் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இதனை தொடர்ந்து இரு தரப்பினருக்குள் அவ்வப்போது சிறு சிறு பிரச்சனைகள் இருந்து வந்ததாக கூறப்படுகிறது. இன் நிலையில் கடந்த சிறு தினங்களுக்கு முன் கொல்லங்குடி வெட்டுடையார் கோவிலில் பாண்டி தரப்பில் நடத்தப்பட்ட திருவிழாவில் சமையல் செய்யப்பட்ட பாத்திரத்தை கண்ணன் தரப்பை சேர்ந்த காளிதாஸ் என்பவர் சேதப்படுத்தியதாகவும் இது குறித்து தனது தம்பி லெட்சுமணராஜா கேட்டதற்கு அவர்களை அடித்து தள்ளியதாகவும், மேலும் இது தொடர்பாக காளையார்கோவில் காவல்நிலையத்தில் புகார் மனு கொடுத்து விசாரணையில் இருந்து வருவதாகவும் கண்ணன் தரப்பினர்கள் பழிவாங்கும் நோக்கில் காளையார்கோவிலில் இருந்து காரில் சென்று சிறுசெங்குளிபட்டியில் உள்ள தனது தங்கை வளர்மதி வீட்டின் அருகே கரு.பாண்டி வந்த போது காளிதாஸ், தெட்சிணாமூர்த்தி, மணிகண்டன் (எ)கண்ணன், கர்ணன், அன்புசெல்வம், காளீஸ்வரன் (எ) மூக்கன் மகேந்திரன், மாதேஸ்வரன் ஆகியோர் இரு சக்கர வாகனங்களில் வந்து தங்கள் கையில் ஆயுதங்களை வைத்துக்கொண்டு ஆபாச வார்த்தைகாளால் திட்டி காரின் சில பகுதிகளை அடித்து சேதப்படுத்தி கொலை மிரட்டல் விடுத்ததாகவும் கூறப்படுகிறது

இதனை தொடர்ந்து கரு.பாண்டி கொடுத்த புகாரின் அடிப்படையில் மேற்படி 8 பேர் மீது பல்வேறு பிரிவுகளின்படி வழக்குப்பதிவு செய்து மதகுபட்டி போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

## உலக புறவுலக சிந்தனையற்றோர்கான விழிப்புணர்வு நிகழ்ச்சி சிவகங்கை மாவட்ட ஆட்சியர் தொடங்கி வைத்தார்





சிவகங்கை ஏப்.4

சிவகங்கை மாவட்டம், மாற்றுத்திறனாளிகள் நலத் துறையின் சார்பில், உலக புறவுலக சிந்தனையற்றோர்கான (ஆட்டிசம்) விழிப்புணர்வு நிகழ்ச்சி, மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித், தலைமையில், காரைக்குடி அழகப்பா பல்கலைகழக கூட்டரங்கில், சிறப்புப்பள்ளிகளின் சிறப்புக் குழந்தைகளை கொண்டு நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சியர் தெரிவிக்கையில்,

ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 2 ஆம் தேதியன்று உலக புறவுலக சிந்தனையற்றோர் தினம் அனுசரிக்கப்பட்டு வருகிறது. இத்தினத்தினை முன்னிட்டு, புறவுலக சிந்தனையற்றோர் குறித்து, பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்திடும் வகையில், மார்ச் 29 முதல் ஏப்ரல் 4 ஆம் தேதி வரையிலான காலத்திற்கு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்திட திட்டமிடப்பட்டு, பல்வேறு நிகழ்வுகள் மாற்றுத் திறனாளிகள் நலத்துறையின் சார்பில் நடத்தப்பட்டு வருகிறது.

அதன் ஒரு பகுதியாக அனைத்து அரசு அலுவலகங்களையும் நீல நிறத்தில் ஒளியூட்டுதல் வேண்டும் என்ற அடிப்படையில், நேற்றையதினம் (02.04.2025) அன்று சிவகங்கை மாவட்ட ஆட்சியரகம் முழுவதும் நீல நிறத்தில் ஒளியூட்டப்பட்டுள்ளது. அதனைத்தொடர்ந்து, இன்றையதினம் சிறப்புப் பள்ளிகளின் சிறப்புக்குழந்தைகளை கொண்டு, காரைக்குடி அழகப்பா பல்கலைகழகத்துடன் இணைந்து, விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மனம் கவருகின்ற வகையில் சிறப்பாக நடைபெற்றது. மாற்றுத் திறனுடைய குழந்தைகளின் பெற்றோர்கள் விழிப்புணர்வுடன் இருத்தல் வேண்டும். தங்களது குழந்தைகளிடம் காணும் குறைபாடுகளின் அடிப்படையில், உடனடியாக அதற்குரிய மருத்துவ சிகிச்சைகள் மற்றும் பயிற்சிகளை சரிவர முறையாக பின்பற்றுவதன் மூலம் தங்களது குழந்தைகளிடம் தாங்கள் முன்னேற்றத்தினை உணரலாம்.

மேலும், வெளிநாடுகளில் மாற்றுத்திறனுடைய குழந்தைகளின் திறன்களை கண்டறிந்து, அவர்களின் சிறப்பு திறன்களில் அவர்களை முழுமையாக ஈடுபடுத்தி வருகின்றனர். அவ்வாறாக குழந்தைகளை ஈடுபடுத்துவதன் மூலம் அவர்களின் தனித்திறன்கள் வெளிக்கொணரப்படுவது மட்டுமன்றி, அவர்கள் மனரீதியாகவும் மகிழ்ச்சியுடன் இருப்பர்.

இன்றையதினம் சிறப்பாக நடைபெற்று கொண்டிருக்கும் இவ்விழிப்புணர்வு நிகழ்ச்சிக்கு மேலும் சிறப்பு சேர்த்திடும் வகையில், சிறப்பு குழந்தைகளின் கலை நிகழ்ச்சிகள் அமைந்தது சிறப்பிற்குரிய ஒன்றாகும். இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டுள்ள ஒவ்வொருவருக்கும் ஊக்கம் அளித்திடும் வகையில், அந்நிகழ்ச்சி அமைந்தது. இக்கலைநிகழ்ச்சியில் பங்கேற்ற அனைத்து சிறப்புக்குழந்தைகளுக்கும் எனது வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.


மேலும், மாவட்டத்திலுள்ள சிறப்புப்பள்ளிகளில் தேவையான அனைத்து வசதிகளும் மேம்படுத்தப்பட்டு வருகிறது. பெற்றோர்கள், சிறப்புப்பள்ளி ஆசிரியர்கள் மற்றும் சிறப்புக்குழந்தைகளுக்கான பயிற்றுநர்கள் அனைவரும் சிறப்புக்குழந்தைகளின் முன்னேறத்தில் தனிகவனம் செலுத்தி, அவர்களுக்கு உறுதுணையாக இருந்து, அவர்கள் வாழ்வில் வளம்பெற அடிப்படையாக இருந்திட வேண்டும் என மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித் தெரிவித்தார்.


முன்னதாக, உலக புறவுலக சிந்தனையற்றோர் தினத்தை முன்னிட்டு, பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்திடும் வகையில், விழிப்புணர்வு கையெழுத்து இயக்கத்தினை சிறப்புப்பள்ளி குழந்தைகளுடன் மாவட்ட ஆட்சியர் தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், அழகப்பா பல்கலைக்கழக பதிவாளர் பேராசிரியர் செந்தில்ராஜன் துணை காவல் கண்காணிப்பாளர் (காரைக்குடி உட்கோட்டம்) பார்த்திபன் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் பாலகிருஷ்ணன், பேராசிரியர் மற்றும் தலைவர் சிறப்புக்கல்வி மற்றும் மறுவாழ்வு அறிவியல் துறை டாக்டர்.சுஜாதாமாலினி, சிறப்புப்பள்ளி ஆசிரியர்கள், சிறப்பு கல்வியியல் மாணாக்கர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## “நிறைந்தது மனம்“ நிகழ்ச்சியின் கீழ் நுண்ணீர் பாசன திட்டத்தில் பயனடைந்த விவசாயிகளை நேரில் சந்தித்து பயன்கள் குறித்து கேட்டறிந்த ஆட்சித்தலைவர்









தமிழ்நாடு முதலமைச்சர் .மு.க.ஸ்டாலின். பொறுப்பேற்ற நாளிலிருந்து தமிழ்நாட்டின் கடைகோடி கிராம மக்களும் பயன்பெறும் வகையில் பல்வேறு நலத்திட்டங்களை அறிவித்து, பிற மாநிலங்களே வியந்து பாராட்டும் வகையில், இது நமது அரசு என்று பொதுமக்கள் அனைவரும் சொல்லும் அளவிற்கு சிறப்பாக பணியாற்றி வருகிறார்கள்.

அதன் ஒரு பகுதியாக தோட்டக்கலைத்துறை மற்றும் மலைப்பயிர்கள்துறை வாயிலாக ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தி இயக்கம் (தேசிய தோட்டக்கலை இயக்கம்), பிரதம மந்திரியின் விவசாயத்திற்கான நீர்ப்பாசனத் திட்டம். மருத்துவப் பயிர்களுக்கான தேசிய ஆயுஷ் இயக்கம், நுண்ணீர் பாசன திட்டம், தேசிய மூங்கில் இயக்கம், தமிழ்நாடு பாசன வேளாண்மை நவீன மயமாக்கல் திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இதுகுறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் ஆர்.அழகுமீனா, தெரிவிக்கையில்

கன்னியாகுமரி மாவட்டத்தில் தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறையின் மூலம் நமது கன்னியாகுமரி மாவட்டத்தில் 201718 ஆம் நிதியாண்டு முதல் 202425 ஆம் நிதியாண்டு வரை 973 பயனாளிகளின் வயல்களில் 888 ஹெக்டர் பரப்பளவில் ரூ.4.40 கோடி மதிப்பீட்டில் நுண்ணீர் பாசன அமைப்பு நிறுவப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் பொதுப்பிரிவு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பிரிவிலுள்ள சிறு குறு விவசாயிகளுக்கு 100% மானியத்துடனும், இதர விவசாயிகளுக்கு 75% மானியத்துடனும் நுண்ணீர் பாசன அமைப்பு தமிழ்நாடு அரசினால் அமைக்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தில் மானியம் பெற விரும்பும் விவசாயிகள் தாங்களே tnhorticulture.gov.in என்ற இணையதளத்தில் பதிவு செய்து கொள்ளலாம். மேலும் உழவன் செயலியில் பதிவு செய்வதன் மூலம் விவசாயிகள் தங்கள் பெயரை முன்னுரிமை பதிவேட்டில் இணைத்துக்கொள்ளலாம். இத்திட்டத்தின் மூலம் பயன் பெற விரும்பும் விவசாய பெருமக்கள் பாஸ்போர்ட் அளவு புகைப்படம் 2, சிறுகுறு விவசாயி சான்று, நிலத்தின் சிட்டா, அடங்கல், நிலத்தின் வரைபடம், குடும்ப அட்டை நகல், நிலவரி ரசீது போன்ற ஆவணங்களுடன் தங்கள் வட்டார தோட்டக்கலை உதவி இயக்குநர் அலுவலகங்களை அணுகி பயன்பெறலாம்.

நிறைந்தது மனது நிகழ்ச்சியின் கீழ் துளி நீரில் அதிக பயிர் நுண்ணீர் பாசன திட்டத்தில் பயனடைந்த கீழ்குளம் பகுதியை சேர்ந்த சேவியர் தெரிவிக்கையில்:

வணக்கம். என் பெயர் சேவியர். நான் கன்னியாகுமரி மாவட்டம் கிள்ளியூர் வட்டாரம் கீழ்குளம் ஆ கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் கீழ்குளம் ஆ கிராமத்தில் 0.80 ஹெக்டர் பரப்பளவில் செவ்வாழை பயிர் சாகுபடி செய்து வருகிறேன். நான் முன்பு பயிருக்கு வாய்க்கால் முறையில் பாசனம் செய்து வந்தேன். 2024 ஆம் ஆண்டு சொட்டு நீர்ப்பாசனம் குறித்து தோட்டக்கலை துறை மூலம் அறிந்து கொண்டேன்.

தற்பொழுது சொட்டு நீர்ப்பாசன முறையில் வேலையாள் ஏதும் இன்றி நான் மட்டுமே நீர்ப்பாசனம் செய்து வருகிறேன். இதில் உடல் வேலை பளுவும் மிக குறைவு. நேரமும் சேமிப்பாகிறது. மேலும் பணமும் குறைவாகவே செலவாகிறது. மேலும் உரங்களையும் நீருடன் கலந்து எளிய முறையில் பயிருக்கு அளிக்க முடிகிறது. இம்முறையில் வாழை பயிரில் களை பிரச்சனையும் பெரிதளவில் இல்லை. இதனால் மகசூல் 15 டன் லிருந்து 18 டன் ஆக உயர்ந்துள்ளது. இதன் மூலம் எனது வருவாய் அதிகரித்துள்ளது. எனவே எனக்கு சொட்டு நீர் பாசனம் அமைத்து தந்த தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்து கொள்கிறேன்.

வேம்பனூர் பகுதியைசேர்ந்த சிறுமணி. தெரிவிக்கையில்:

வணக்கம். என் பெயர் சிறுமணி. நான் இராஜாக்கமங்கலம் வட்டாரம், வேம்பனூர் மேற்கு கிராமம் பகுதியில் வசித்து வருகிறேன். நான் வேம்பனூர் மேற்கு கிராமத்தில் 1.3 ஹெக்டர் பரப்பளவில் தென்னை மற்றும் தென்னையில் ஊடுபயிராக கோகோ பயிர் சாகுபடி செய்து வருகிறேன்.

2023 ஆம் ஆண்டு விவசாயிகள் விழிப்புணர்வு கூட்டத்தில் சொட்டு நீர் பாசனம் குறித்து தோட்டக்கலை துறை மூலம் அறிந்து கொண்டேன். தோட்டக்கலை துறை அதிகாரிகளை அணுகி சொட்டு நீர் பாசனம் குறித்தும் அதன் பயன்கள் குறித்தும் கேட்டறிந்து கொண்டேன். அதன்பிறகு தோட்டக்கலை துறை மூலம் மானியத்தில் சொட்டு நீர் பாசனம் அமைக்க விண்ணப்பித்து ரூ.1.10,925 மானியத்தில் தென்னை மற்றும் கோகோ பயிருக்கு சொட்டு நீர் பாசனம் அமைத்தேன். நான் முன்பு வாய்க்கால் நீர்ப்பாசன முறையில் நீர் பாசனம் செய்தபோது, நீர் பாய்ச்சக்கூடிய நேரம் அதிகமாகும். தற்பொழுது சொட்டு நீர் பாசன முறையில் வேலை ஆள் ஏதும் இன்றி நானும் எனது மகனும் மட்டுமே நீர் பாசனம் செய்து வருகிறோம். இதில் ஆகும் உடல் வேலை பழுவும் மிக குறைவு, நேரமும் மிச்சமாகிறது. மேலும் பணமும் குறைவாகவே செலவாகிறது.

மேலும் உரங்களையும் நீருடன் கலந்து எளிய முறையில் பயிருக்கு அளிக்கமுடிகிறது. இவ்வாறு உரம் வைக்கும்போது பயிர் செழிப்பாகவும், மகசூலும் அதிகமாக கிடைக்கிறது இம்முறையில் நீர் பயிரின் வேரில் மட்டும் பாய்வதால் களை பிரச்சனையும் பெரிதளவில் இல்லை.

கோகோ மரங்களிலிருந்து மகசூல் 1 டன் லிருந்து 1.2 டன் ஆக உயர்ந்துள்ளது. இதன் மூலம் எனது வருவாய் உயர்ந்து எனது பொருளாதாரமும் உயர்ந்து வருகிறது. இத்தருணத்தில் சொட்டு நீர் பாசனம் அமைத்து தந்த முதலமைச்சர் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

தொகுப்பு

பா.ஜாண் ஜெகத் பிரைட், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர். கன்னியாகுமரி மாவட்டம். எஸ்.செல்வலெட் சுஷ்மா. உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (செய்தி), கன்னியாகுமரி மாவட்டம்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.

Printed , published by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi,Rajasekaran Street, vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ.8508502161